பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

★ விலை ரூபா 1-25

ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26 மாசி 1 ஜ. ஆவ் 10 இதழ் 2
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13-2-84

இலங்கையில் யுரேனியம்: பொய் செய்திக்கு மறுப்பு

(தொழும்பு)

இலங்கையில் 'யூரேனியம்' படிவங்கள் இருப்பதாக வெளிவந்த செய்திகள் தவறானவை என்றமணுசக்தி அதிகாரசபையின் தலைவர் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு அறிவித்துள்ளது.

இலங்கையின் கடற்கரைகளில் 'யூரேனியம்' படிவங்களை இலங்கை அணுசக்தி அதிகாரசபை கண்டுபிடித்துள்ளதாக டுபாயிலுள்ள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டதை மறுத்தே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இலங்கை புவியியல் ஆய்வுத் திணைக்களம் இலங்கை அணுசக்தி அதிகாரசபையினதும் சர்வதேச அணுசக்தி ஏஜென்சியினதும் உதவியுடன் 'யுரேனியம்' இருக்கின்றதா என்பது குறித்து ஆராய்ச்சி நடத்தி

(8-ம் பக்கம் பார்க்க)

★ தமிழர் பிரச்னைபற்றிய சர்வகட்சி மாநாடு:

இந்தியத் தூதுவர் - ஜனதிபதி

திடீர்ச் சந்திப்பு

90 நிமிடம் பேச்சுநடத்தினர்

(நமது சிறப்பு நிருபர்)

தமிழர் பிரச்னை தொடர்பாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. எஸ். ஜே. எஸ். சத்வால், ஜனதிபதி ஜே ஆர் ஜயவர்த்தனவுடன் நேற்று முன்தினம் நீண்டநேரம் வரை பேச்சுக்கள் நடத்தினர்.

இச்சந்திப்பு எதிர்பாராத விதமாக நடந்தது.

ஒன்றரைமணி நேரம் வரை நடைபெற்ற இந்தப்பேச்சுக்களின் விபரம் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை என்றாலும்; தமிழ் மக்களின் உடனடிப் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க எந்தவிதமான நடவடிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பது குறித்தும் சர்வகட்சி மாநாடு முன்னேற்றம்பற்றியும் இப்பேச்சுக்களின் போது ஆழமாக ஆராயப்பட்டதாக அறியப்படுகிறது.

தமிழர் பிரச்னைக்குத்தீர்வு காணும் சில வழிவகைகள் இந்தப் பேச்சுக்களின்போது மிகவும் நுணுக்கமாக ஆராயப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இந்தியத் தூதுவர் திரு. சத்வால் இதற்கு முன்னரும் சில தடவைகள் ஜனதிபதியைச் சந்தித்து, தமிழர் பிரச்னைகள் குறித்து பேச்சுக்கள் நடத்தியது தெரிந்ததே.

நாளை துக்கதினம்

(தொழும்பு)

சோவியத் அதிபர் யூரி அந்ரபோவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து நாளை செவ்வாய்க்கிழமை தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றையதினம் சகல அரச நிறுவனங்களிலும் அரைக்கம்பத்தில் தேசியக்கொடியை பறக்க விடுமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சு பணித்துள்ளது.

இதேவேளை இறுதிச்சடங்குகளில் ஜனதிபதியின் சார்பில் கலந்து கொள்வதற்காக வெளிநாட்டமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் நேற்று மாஸ்கோ பயணமானார். (கு)

துப்பாக்கி முனையில் பெண் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் உள்ள வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு துப்பாக்கி முனையில் பெண் ஒருவர் கடத்தப்பட்டார்.

இரவு 9-30 மணியளவில், அவ்வீட்டுப்பகுதியில் வீசப்பட்ட குண்டொன்று பலத்த சத்தத்துடன் வெடித்ததாக அறியப்படுகிறது.

காரிலும் மோட்டார் சைக்கிளிலும் வந்த இனைஞர்கள் அவ்வீட்டிலிருந்த பெண்ணைக் கடத்தியதாகக் கூறப்படுகிறது.

இக்கடத்தல் சம்பவத்திற்கும், நவாலி மயானத்தில் காணப்பட்ட பெண்ணின் சடலத்திற்கும், சம்பந்தமுள்ளதா என்பதுபற்றி பொலிசார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (க)

எரிந்த நிலையில் பெண்ணின் சடலம்!

(யாழ்ப்பாணம்)

நவாலி மயானத்தில் எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட பெண்ணின் சடலம் காரைநகரைச்சேர்ந்த இராசையா இந்துமதியினுடையது என்று நேற்று அடையாளம் காணப்பட்டது.

இறந்த பெண்ணுக்கு 18 வயதென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பெண்ணின் மரண மரணம் தொடர்பாக இன்று காலை மரணவிசாரணை நடைபெறவிருக்கிறது.

யாழ். பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு. முத்துத்தம்பி மரண விசாரணைக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

யாழ். மரண விசாரணை அதிகாரி திரு எஸ். பிராங்சிஸ் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு மரண விசாரணையை இன்று காலை வரைஒத்தி வைத்தார். (க)

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்:

ஜனதிபதியுடன் இறுதிப் பேச்சுவார்த்தை

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்விஷயமாக ஜனதிபதியுடன் இறுதிப் பேச்சுவார்த்தை நடந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்நகரில் நேற்று நடந்த பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கூட்டத்தில் பேசிய பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சங்கச் செயலாளர் திரு ஐ. தி. சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத்தலைவர் திரு ஜே. இராஜசிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் சம்பந்தன் மேலும் கூறியதாவது: "தொ

(8-ம் பக்கம் பார்க்க)

கூட்டணி ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய ஆலோனைக்கூட்டமொன்று இன்றுகாலை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்

(8-ம் பக்கம் பார்க்க)

பல்கலைக் கழக மாணவர்

கொடித்தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப்பிரதேசங்களில்வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அனைத்துப்பல்கலைக்கழக தமிழ் மாணவர் நாளை செவ்வாய்க்கிழமை கொடிதினம் அனுஷ்டிக்க முடிவு செய்துள்ளனர்.

மாணவர்களிடமிருந்து ஒரு ரூபா வீதம் இந்த நிவாரண நிதிக்கு, கொடிவிற்று நிதி சேகரிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக தமிழ் மாணவர், மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி தமிழ் மாணவர் மற்றும் பாதிக்கப்பட்ட தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள் அடங்கிய அனைத்துப் பல்கலைக்கழக தமிழ்மாணவர் இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளனர்.

"திருமலையை வெளிநாட்டுக்கு

அடகுவைக்க மாட்டோம்!"

பிரதமர் பிரேமதாசா திடசங்கற்பம்

[திருகோணமலை]

"திருகோணமலை மக்களின் அவசியதேவையான குடிநீர்த் திட்டம் 80 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு 50 கோடி ரூபாவை பிரெஞ்ச் அரசாங்கம் தந்துதவியது. 30 கோடிரூபா இலங்கை அரசால் செலவிடப்பட்டது".

இவ்வாறு பிரதம மந்திரி திரு ஆர் பிரேமதாசா நேற்று திருகோணமலை நகர குழாய் நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

ஒருசமூகத்தையோ, மொழியையோ வைத்து எமதுசேவை இடம்பெறவில்லை. எந்தச்சமூகத்திற்கும் தீங்கு விளைக்கும் நோக்கத்தை நாம் கொண்டிருக்கவில்லை.

"நாட்டின் ஒரு தொகுதியோ, மாவட்டமோ தனியாகப்பிரிந்து முன்னேற முடியாது. இன்றையயுகம்இணைந்து செயல்படும் புதுயுகமாகும். சுயாட்சி அமைப்பதாக இருந்தால் சகல வளங்களையும் அப்பகுதிக்குள் இருந்துதான் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படியான சகல வளங்களையும்கொண்ட தொகுதியோ, மாவட்டமோ இலங்கையில் இருப்பதுபற்றி எனக்குத்தெரியாது. அப்படியான மாவட்டம் இருந்தால் எனக்குத்தெரியவுங்கள்.

'ஒருபிரதேசம் சுயாட்சிபெற அந்தப்பிரதேசத்தில் உண்மையான பொருளாதார வளம் இருக்கவேண்டும். இந்நிலையில் நாட்டின் ஒருபகுதி மக்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

பழைய இடங்களுக்குச் சென்ற பொறியியல் மாணவர் திரும்பினர்

[யாழ்ப்பாணம்]

பாதிக்கப்பட்டு மீண்டும் பழைய இடங்களுக்குச் சென்ற முதலாம்வருட தமிழ் பொறியியலாளர் மாணவர்கள்நேற்று யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர்

தென்பகுதி பல்கலைக்கழகங்களில் தொடர்ந்தும் பயிலமுடியாத சூழ்நிலை இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இவர்கள் கூடி எதிர்காலம் பற்றி ஆராயவுள்ளனர். (க)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

பெரிய விளான் தெல்லிப்பளை பிரதான வீதிக்கு அருகில் ஒரு ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. காணியில் கனி மரங்களும், கிணறும், மின்சாரமும் உண்டு. வாங்க விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். சு. மனுவேல்பிள்ளை, "ஜெயவாசம்", பிரதான வீதி, இளவாலை. 763

உறுதியான ஷோகேஸ் (கண்ணாடி) அலுமாரிகள் விற்பனைக்குண்டு நேரில் பார்வையிடலாம். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: கருமாரி மோட்டோர் கொம்பனி, 281A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 23183. (757)

22ஏரி தொடர் இலக்க நல்ல நிலையில் உள்ள ஒஸ்டின் லொறி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு முகவரி: "கனகலனம்," உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். 720

அளவெட்டி, அலுக்கை, மகழய மில் ஒழுங்கையில் தென்னைமரங்களுடன் இரண்டு பரப்புகாணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: P. சிவபாலன், மே/பா. பொன்னையா, அலுக்கை ஒழுங்கை, கேணிக்கரை, அளவெட்டி. 726

இலங்கை பூராவும் வாகன விநியோகத்திற்கு உள்ளூர் உற்பத்திகளும் இறக்குமதி பொருட்களும் மொத்த விற்பனைக்கு கமிஷன் அடிப்படையில் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். எஸ். வி. சாமி அன் சன்ஸ் 519, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணப். 734

காங்கேசன்துறை பட்டினசபை எல்லைக்குள் தபால் கந்தோர் பாடசாலை சந்தை என்பவற்றுக்கண்மையில் மின்சார வசதியுள்ள 4 பரப்புக் காணியும் வீடும் - புகையிரத நிலையத்துக்கண்மையில் கிணறு, மலகூடம் என்பவற்றுடன் கூடிய மூன்று பரப்புக் காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: வெ சுந்தரமூர்த்தி "நளினி", அளவெட்டி வடக்கு, அளவெட்டி. 773

பலவித டிஸைன்களில் தரமான கொங்றீட் பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. M. T. பொன்னம்பலம், காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். 772

கோண்டாவிலில் பலாலி ரோட்டு முகப்பைக்கொண்ட இரண்டு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கா. ஜெகநாதன், சட்டத்தரணி, நிருநெல்வேலி அல்லது க. அரியநாயகம் சட்டத்தரணி ஏழாலை. 771

நல்லநிலையிலுள்ள "கவசாகி" 110 சீ. சீ. மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. ஒருவர் சொந்தப் பாவிப்பிலுள்ள புத்தம் புதியதாக கொள்வனவுசெய்யப்பட்டது. விபரங்களுக்கு: அன்ரன் செபஸ்தியாம்பிள்ளை, 23/1, சுச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். 769

வண்ணார்பண்ணையில், கே. கே. எஸ். வீதியில் 10 பரப்பு காணி புதிய வீட்டுடன் சகல வசதிகளுடனும் தொலைபேசி உட்பட, இரு பிரிவுகளாகவும் கொடுக்கப்படும். 699/2, கே. கே. எஸ் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 11-2-84ல் திறக்குமுன் தொடர்புகொள்ளவும். 768

விற்பனைக்கு

நல்ல இனத்து அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்க. 11/1, ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23656. 755

கைபுரோ புரொயிலர் (Hybro Broiler) குஞ்சு விநியோகம் 23த் திகதி வியாழக்கிழமை ஹைசெக்ஸ் (Hisex) வெள்ளை பிறவுன் பேட்டுக்குஞ்சு, சேவல் குஞ்சு விநியோகம் 5-3-84 திகதி உடன் பதிவு செய்க: சற்குணராஜா அன்ட் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 673

தேவை

றெடிமேட் சட்டைகள், பிளவுஸ் முதலியவை வெட்டித் தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. உடன் தொடர்பு கொள்க. நாதன் ரெக்ஸ்ரைல்ஸ், 179 நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம். 754

அனுபவம் மிக்க சமையல்காரர் தேவை. அதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் நேரில் வரவும். ராகுலகுரி பஸ் இல. 122பிரதான வீதி, பருத்தித்துறை. 759

ஆங்கிலம் தெரிந்த ஸ்ரப்பிங் ஆண் தேவை. ஓய்வூதியம்பெற்றவர் விரும்பத்தக்கது. பாதுகாப்புசேவைக்கு பொலீஸ்சேவையில் இருந்து ஓய்வுபெற்றவரும் தேவை விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 770, C/o ஈழநாடு லிமிட் யாழ்ப்பாணம். 770

பயிற்சி

உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கேற்றமுறையில் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். கட்டணம் ரூபா 150/- மட்டும். விபரங்கட்கு யூக்கி (JuKi) மெசின் பயிற்சி நிலையம், 246, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் அல்லது 23, நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணம். 752

இரண்டு மாத எலெக்ரிக்கல் வயறிங் - ஒட்டோ வயறிங் பயிற்சிகள் 15-02-84 ஆரம்பமாகின்றன இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ்ஜினியறிங் ரெக்னோலோஜி 11 B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 789

தவறிவிட்டது

எனது பாஸ்போர்ட் (இல: E 106865) 9-2-84 அன்று சண்டிலிப்பாய்-சங்கானை இடையில் தபாற் கந்தோர் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து ஒப்படைக்கவும். அல்லது தகவல் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. பரஸ்கரமூர்த்தி, பருனை ரோட், களிபுரம். 744

வகுப்புகள்

G. S. Q. [Bio: Physical: Maths], B. Sc. [Bio: Physical: Maths] மேற்படி வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. விஞ்ஞான செய்முறைகளுக்கு ஏற்ப விஞ்ஞானகூடம் அமைக்கப்பட்டுள்ளது. அதிபர் உயர்கல்விக்கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் 653

வகுப்புகள்

Montessori Diploma Teachers Training Course [பாலர் ஆசிரியர் பயிற்சி]; Home Science Diploma Training Course [மனையியல் பயிற்சி] வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன விரும்புபவர்கள் 29-02-84க்கு முன் வகுப்பில் சேரவும். அதிபர், உயர்கல்விக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 654

Pitman Institute London Exam June 1984 Approved Centre உயர்கல்விக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் தனிப்பட்ட மாணவர்களிடமிருந்து Shorthand Typewriting பாடங்களுக்குரிய விண்ணப்பங்கள் 30-4-84க்கு முன் கோரப்படுகின்றன. விபரத்துக்கு அதிபர் உயர்கல்விக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 655

தேங்காய் விற்பனை

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான தோட்டங்களில் தேங்காய் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் நேரடியாக தேங்காய்களைப் பார்த்து கேள்விகளை (TENDERS) சமர்ப்பிக்கவும்.

Area Superintendent
JEDB, Pallai.
(766)

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
யாழ்ப்பாணம்கந்தர்மடம் இல. 16, பழம் ரோட்டைச் சேர்ந்த நாகலிங்கம் சிவலிங்கம் என்பவரின் மரண சாதனமில்லாச்சொத்தின் விடயமாக.

நாகலிங்கம் சிவலிங்கம் ஆகம்பெண் ஜெயரஞ்சிதம், இல 16, பழம் ரோட்டு, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம். இல 3766

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதிவுப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு மாதம் 20-த் திகதி முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்டபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
(ஒப்பம்)
கே. குலசிங்கம்,
பதிவாளர்.

தேதி 16-11-83
20-1-84

காரணம் காட்டும் திகதி 30-3-84க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்)
கே- குலசிங்கம்
பதிவாளர்

மனுதாரரின் சட்டத்தரணி
R. சிவசுப்பிரமணியம்,
230, சேர். பொன்.
இராமநாதன் ரோட்,
யாழ்ப்பாணம் 560

தொழில் ஆலோசகர் சேவை

முன்னைநாள் கிறேஷ்ட உதவி தொழில் ஆணையாளரிடம் தொழில் சட்டங்கள் (சேமலாபநிதி உட்பட) ஊழியர் நஷ்ட ஈடு, மற்றும் தொழில் நியாயமன்றம் சம்பந்தப்பட்ட நிபுணத்துவ ஆலோசனைகளும் பெறவும் மலிவில் ஆஜராகி சட்டவாதம் செய்யவும் தொடர்பு கொள்க

எஸ். எப் பிலிப்பா
B.Sc(London)E X C A.S.
9/2, மூளாய் லேன் off
குருகோவில் ரோட்,
யாழ்ப்பாணம்.
(748)

தொண்டர்களுக்கு பாராட்டு

(சாவகச்சேரி)

வைதடி அதிகள் முகாம் ஆரம்பிக்கப்பட்டு அரைஆண்டு பூர்த்தியானதை முன்னிட்டு நினைவுநினைக் கூட்டமொன்றை முகாம் நிர்வாகிகள் கொண்டாடினர்.

மிகவும் எளிமையாக நடாத்தப்பட்ட இவ்வைபவத்தில் போது கடந்த ஆறுமாதகாலமாக இம்முகாமில் தொண்டர் சேவையில் ஈடுபட்டுள்ள அறவழிப் போராட்டக்குழுத் தொண்டர்களின், முகாம்நிர்வாகிகளும், அதிகளும் பாராட்டிக்கௌரவித்தனர்.

வைதடி அதிகள் முகாமில் தற்போது 526 பேர் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்

முதலாண்டு நினைவஞ்சலி

மாட்டீன் ஜோசப் சில்வா

மலர்வு: 15-09-1960 உதிர்வு: 10-02-1983



ஓ. அன்பு நண்பா

நீ பிரிந்து ஓராண்டு சென்றாலும் இன்னும் எம் நினைவில் நீயே நிறைகிறாய் உன் புன்னகை தவழும் வதனத்தை இனி நாம் எப்போது காண்போம். உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

எல்லென்றும்
உன் பிரிவால் துயருறும்
ஆத்ம நண்பர்கள்

Convent Road,
Jafina. (740)

முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

கனகரத்தினம் துரைசிங்கம்

(விலை மதிப்பு திணைக்களம்)

உதயம்: 23-2-1934 உதிர்வு: 15-2-1983

அன்பாலும் பண்பாலும் ஒளிவிளக்காய் பிரகாசித்த எங்கள் அன்புத் தெய்வமே! என்றும் சந்தோசமாக வாழவேண்டும் என்கிற நீங்கள் திடீரென எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு முருகன் திருவடி சேர்ந்துவிட்டீர்களே! உங்கள் களங்கமற்ற அன்பு நினைவுகளும் ஆறாத்துயரும் எங்கள் இதயத்தைவிட்டு என்றுமே அகலாதிருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவடிகளை பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், மைத்துனர்,
மருமக்கள். (764)

6, கந்தபுராண வீதி,
கந்தர்மடம்.

தியாகோ கார்சியாவில்

அமெரிக்க அணு ஆயுதங்கள்!

பிரெஞ்சு பாதிரியார் தரும் திடுக்கிடும் தகவல்கள்

லண்டன், பெப். 12

"அணுவாயுதங்களைக் கொண்ட அமெரிக்க நீர்மூழ்கிகள் எரிபொருளை நிரப்புவதற்காகவும் திருத்த வேலைகளுக்காகவும் தியாகோ கார்சியாவின் ராணுவத் தளங்களைப் பயன்படுத்துகின்றன. தியாகோகார்சியாவில் அமெரிக்க அணுவாயுதங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று இப்பிராந்திய மக்கள் கொண்டுள்ள கருத்தை இது ஊர்ஜிதப்படுத்துகிறது." என்று அண்மையில் தியாகோகார்சியாவுக்குச்சென்று அங்குமூன்று வாரங்கள் தங்கியிருந்து திரும்பிய பிரெஞ்சு கத்தோலிக்கப் பாதிரியாரான அலெய்ன் ஹரெல், பிரிட்டிஷ் பத்திரிகையான ஒப்சேவருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்தீவில் மொரீஷியஸ், பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் வேலைசெய்துவருகின்றனர்.

"தியாகோகார்ஸியாதீவில் அமெரிக்காவின் 82வது 'எயர் போர்ன் டிவிஷனின் யூனிட்டு'கள் பல நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ளன. இரசாயன நச்சு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் ஒரு பலமிக்க தளமாக இந்தீவு மாறிக்கொண்டிருக்கிறது. இதே 'டிவிஷனை'ச் சேர்ந்த துருப்புகள்தான் வியட்நாம் யுத்தத்தின்போது, வியட்நாமிய மண்ணில் நச்சுத்திரவங்களைத் தெளிப்பதில் ஈடுபட்டிருந்தன" என்று இப்பாதிரியார் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இந்தீவின் மீதாகப் பறக்கும் அண்டைநாடுகளின் பயணிகள் விமானங்கள் இந்தீவில் நடைபெறும் கட்டட நிர்மாண வேலைகளையும், இரண்டு மைல் நீளமுடைய விமான ஓடுபாதையின் நிர்மாண வேலைகளையும், அவதானித்துள்ளன. இந்த ஓடுபாதை, "பி-52 போருபாய குண்டுவீசிகு விமானங்கள்" செல்லக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்து சமுத்திரத்தில் ஒரு பெரிய அரணாக இந்தீவு ஆக்கப்பட்டுள்ளது" என்றும் பாதிரியார் அலெய்ன் ஹரெல் குறிப்பிட்டுள்ளார்.

"இந்துசமுத்திரப் பிராந்தியத்தை அமெரிக்கர்கள் தம் கைகளில் வைத்திருப்பதற்குக் காரணம் அமெரிக்கத் தொழிற்துறை பயன்படுத்தும் 54 ரக மூலப் பொருட்களில் 33 ரகங்கள் இப்பகுதியிலிருந்து எடுக்கப்படுபவைதான். இப்பிராந்திய நாடுகளில் அமெரிக்கப் பன்தேசிய நிறுவனங்கள் 10,00 கோடி டாலர்களை முதலீடு செய்துள்ளன.

வாஷிங்டனிலாலும், பிரிட்டனிலாலும் தியாகோகார்சியா தீவிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு மொரீஷியஸ்தீவிற்கு அனுப்பப்பட்ட தியாகோகார்ஸியா மக்கள், தம் தாயகத்தைத் திரும்பப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்கான கோரிக்கையை அவர்கள் சர்வதேசநீதிமன்றத்திற்கும் அனுப்பியுள்ளனர்" என்றும் இப்பாதிரியார் குறிப்பிடுகின்றார்

பரதநாட்டிய உலகில் தலைசிறந்தவர்"

பாலசரஸ்வதி மறைவு குறித்து இந்திரா

(சென்னை)

"காலஞ்சென்ற பரதநாட்டியக்கலைஞர் திருமதி ரி. பாலசரஸ்வதியை எனக்கு மிகவும் தெரியும். அவர் பரதநாட்டியத்தில் தலைசிறந்து விளங்கியவர். தேசிய கலாசாரபாரம்பரியத்தைக் கட்டி வளர்த்தவர். பரதநாட்டிய உலகில் உச்சத்துக்கே சென்றவர். அவரது மறைவு பேரிழப்பானது" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி விடுத்துள்ள இரங்கற் செய்தியில்; தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநர் விடுத்த செய்தியில் இந்த நூற்றாண்டின் தலைசிறந்த பரதநாட்டியக்கலைஞர் திருமதி பாலசரஸ்வதி" என்று குறிப்பிட்டுள்ளார்.

உத்தரபிரதேச அமைச்சரவையில் மாற்றங்கள்

புதுடில்லி, பெப் 11

உத்தரபிரதேச அமைச்சரவையிலும், அமைச்சர்களின் இலாகாப் பொறுப்புக்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. (வெ)

இந்திய - பாகிஸ்தான் உறவு வலுப்படுத்தப்பட வேண்டும்

பாகிஸ்தான் ஜனாதிபதி கூறுகிறார்

இஸ்லாமாபாத், பெப். 12

"இந்திய-பாகிஸ்தான் உறவுகள் சீர்குலைந்துவருவதாகக் கருதப்படுவதால் இருநாடுகளும் உறவுகளை வலுப்படுத்த வேண்டும்"

இவ்வாறு பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியா-வுல் ஹக் ராவல்பிண்டியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் அதிகு மேலும் தெரிவிக்கையில்:-

"இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் ஸ்திரப்பாட்டிற்கும், சமாதானத்திற்கும் இந்திய-பாகிஸ்தான் நட்புறவு அவசியமானது என்று கூறினார்

கடந்த செவ்வாய்கிழமை பாகிஸ்தானின் விமானச்சிப்பந்திகள் இருவர் புதுடில்லியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர்.

இதனைவடுத்து பாகிஸ்தானும் இந்திய விமானச்சேவை ஊழியர்கள் இருவரை தனது நாட்டிலிருந்து வெளியேற்றியது.

அதேவேளை காஷ்மீர் பகுதியில் விமான நிலையமொன்றை அமைக்க சீனா முயன்றுவருவதாக இந்தியா குற்றம்சாட்டியுள்ளது (வெ)

மழையின் சீற்றம்: வடமராட்சிக்கு பலத்த சேதம்!

(புலோலி)

கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்த அடைமழையினால் வடமராட்சிப் பகுதியில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான கால்நடைகள் இறந்துள்ளதோடு நூற்றுக்கணக்கானோர் வீடுவாசல்களை இழந்து பாடசாலைகளிலும் பொதுக்கட்டிடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கிக்கிடக்கின்றன.

விவசாயிகள் பெருநஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர் மீனவர்கள் சீவல் தொழிலாளர்கள் ஆகியோரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். முக்கியமாக குடாரப்பு, நாகர்கோவில் அம்பன் குடத்தனை கற்கோவளம் புலோலி மேற்கு, ஆக்காய், துன்னாலை தொண்டமானாறு கெருடாவில் கரவெட்டி இராஜகிராமம் பகுதி மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

மோசக்குவரத்து வசதிகள் ஸ்தம்பித்திருந்தன. தொலைபேசிவசதிகள் துண்டிக்கப்பட்டிருந்தன. இவ்அடைமழையினால் பெரும்பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு இங்குள்ள பல பொது சமூக நிறுவனங்கள் யாழ் அரச அதிபரிடம் யாழ். சமூகசேவை உதவிப் பணிப்பாளர் யாழ் சமூகசேவை உதவி ஆணையாளர் உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோரை அவசரமாகக் கோரியுள்ளன.

சென்னை 'றிசேர்வ்' வங்கியில் தீ!

(சென்னை)

சென்னை 'றிசேர்வ்' வங்கியின் ஒருபகுதியில் தீப்பிடித்தது மின்சாரக் கோளாறே இத்தீ பிடிப்புக்குக் காரணமென்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் வங்கியிலிருந்த பணநோட்டுக்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை யென்றும் கூறப்பட்டது (வெ)

பிலிப்ஸ் வழங்கும் தன்னியக்கச் சுழல் மின் விசிறிகள்

2 உன்னதத் திருப்தி அம்சங்கள் கொண்டவை



1. உட்புறம் சக்தி மிக்கது. சப்தம் அற்றது.

சிறப்பம்சங்கள்:

- நீடித்துழைக்கும் தரமுயர்ந்த பிலிப்ஸ் உறுப்புகள்.
- உச்சச் சக்தி தரும் சப்தமற்ற மோட்டார்.

2. வெளிப்புறம் - கவர்ச்சி மிக்க நவீன தோற்றம்.

- உலோக அலகுகள். (4 அலகுகளுடனும் கிடைக்கும்.)
- வலம். இடமாக 90 பாகைக்கும் மேலாகச் சுழலும்.
- 3 வேகங்கள். 4 அழுத்து விசைகள் மூலம் இயங்கும்.

விலை: ரூ2000/= அமெரிக்க டொலர்: 33



இலங்கையில் பிலிப்ஸ் நிறுவனத்தின் ஏக பிரதிநிதிகள்:

ஹேலீஸ் லிமிட்டெட்.

25, வொஸ்டர் ஒழுங்கை, கொழும்பு 10.
தொலைபேசி: 91181 - 9

காட்சிச்சாலை:
646, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 86958

மேலும் கிடைக்குமிடம்: தீர்வையற்ற, தரைத் தளக் கடை எண் 2
தீர்வையற்ற வர்த்தக வலயம், கொழும்பு 3.

PHILIPS பிலிப்ஸ் துணையுடன் அதி சிறந்ததை அளிப்போம்.

மணிவாக்கு

எனக்குப் பிடித்தமானவை; எளிமை வாழ்வு, ஒருமுகப்பட்ட நோக்கம், நூல்களில் நுழைதல், நான் வெறுப்பது: அடிமை வாழ்வு, கோழைத்தனம், எதனையும் வாதாடிச் சண்டையிட்டு நிலைநாட்டுவதே இன்பத்தை அடையும் வழி.

— கார்ல் மார்க்ஸ்

நமது நோக்கு

யூரி அந்ரபோவ்

சோவியத் அதிபர் யூரி அந்ரபோவ் அவர்களின் மறைவு கேட்ட உலக சமுதாயம் பேரதிர்ச்சி அடையும்.

மறைந்த மாமனிதன் ஒரு தனிமனிதன் அல்ல; ஒரு தேசத்தின் பெருந்தலைவர் மட்டுமல்ல; உலகில் ஒரு பெரும் பகுதியின் தலைவிதியை நிர்ணயிக்கும் அதிகாரம் படைத்தவர் இன்றில்லையே என்ற கவலைக்கு உரித்தானவரென்பது குறிப்பிடவேண்டியது.

இவ்வுலக வாழ்வு சிறப்புற ஒரு புதிய சமுதாய இலட்சியத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தி அதனை அதிசயமான வேகத்தில் செயற்படுத்திய தலைவர்கள் தலைமுறையில் ஒரு முக்கிய இடம் வகித்தவர் திரு. யூரி அந்ரபோவ்.

அமெரிக்காவை முதன் முதலாகக் கண்டு பிடித்த கொலம்பஸ் உலக புவியியல் படத்தில் உண்டான பெரு மாற்றத்துக்கு உதவினார். கம்யூனிசம் என்ற வாழ்க்கைச் சித்தாந்தத்தை உருவாக்கிய கார்ல் மார்க்ஸ் மூனிவர் இன்றைய அரசியல், சமுதாய உலகில் வரலாறு காணாத மாற்றத்துக்கு வித்திட்டவர்.

கொலம்பஸ் கண்டு பிடித்த அமெரிக்கா இன்றொரு குபேர நாடாக மட்டுமல்ல, முதலாளித்துவ சித்தாந்தத்தின் மிகப் பெருந்தலைமைதாங்கிதலைநிமிர்ந்து நிற்கின்றது.

இவ்விரு வாழ்க்கைமுறைகள் ஒன்றுக்கொன்று விரோதமானவை என்ற வகையில் உலகம் பெரும்பாலும் இரண்டாகப் பிளவுபட்டிருக்கிறது; அதுவே உலக சமாதானத்துக்கு முட்டுக்கட்டையாக நிலவும் கெடுபிடி யுத்தத்தின் காரணமுமாகும்.

உண்மையில் இவ்வித பிளவு, பிணக்கு, உலக நாடுகள் இரண்டு அணியாகத்திரளவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தினாலும் அது தவிர்க்க முடியாததா?

பெரிய ஆராய்ச்சி நமக்கோரத் [illegible]களென்பதை நாம் உணர்ந்தபோதும் பொதுமக்களுக்கு எம்முடைய தெளிந்த கருத்துக்களை பகிர்ந்து கொள்ளப் பொருத்தமான தினம் இன்றைய தினமெனலாம்.

உலகத் தலைவர்களின் பெருமை படைத்த ஒருவரான சோவியத் அதிபர் யூரி அந்ரபோவின் மறைவு உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தும் சம்பவமென்பதை நாம் உணரவேண்டும்.

கம்யூனிசம் சொல்லுவது என்ன? எந்த நாட்டு மனிதனாலும், ஒவ்வொருவனும் தன்னுடைய உழைப்பின் உறுதிகாணவேண்டும், அவனுடைய ஊதியத்தை வேறெவரும் சுரண்டலாகாது.

இன்றொருவகையில் இதை விளக்கினால் இன்றைய பொந்தவிப்பு ஓரளவிற்குப் புரியும்; எந்த மனிதனும் தன்னுடைய மூலதனங்கொண்டுதான் பங்கெடுத்து உழைக்காது செல்வத்தைப் பெருக்குவது கம்யூனிச வாழ்க்கைமுறைக்கு நேர் மாறானது

முதலாளித்துவம் சொல்வது என்ன? ஒருவன் உழைத்தோ, உழையாமலோ தன்முதலைக்கொண்டு பெறும் ஆதாயத்துக்கு தானும் பங்காளியே என்பது.

இவ்விரு வாழ்க்கை முறைகளைச் செயற்படுத்தும் நாடுகளும், சமூகங்களும், அனேகம்; இருப்பினும் பிணக்கு உருவெடுப்பதற்கு ஏதுவான வேறுபாடு கம்யூனிசத்தில் தனிமனிதனின் உரிமை பறிக்கப்படுகிறது; அது அடக்குமுறை ஆட்சி, ஜனநாயகம் அல்ல என்று சொல்லப்படுகிறது.

முதலாளித்துவத்தில் 'தனிமனித சுதந்திரம்' வாய்வேதாந்தம்; உழைத்தோ உழைப்பின்றியோ பொதுமக்கள் வாடி மடிவதற்கே அவ்வித சுதந்திரம் உதவுகின்றது; முதலாளிவர்க்கம் குபேரவாழ்வு; தொழிலாளிவர்க்கம் அடிமை வாழ்வென்ற குறைபாடு சொல்லப்படுகிறது.

வேறுபாடு மாறுபாடாக வேண்டியதில்லை என்பதே மூன்றும் உலக நாடுகளின் மிதவாதம்.

இந்தப் பரந்த உலகில் நல்லெண்ணம் நிலவமுடியுமானால் இவ்விரு வாழ்க்கை முறை அரசியல்முறை, சமுதாய அமைப்பு தன்னுக்கு சக வாழ்வு வாழலாமென்பதை நாம் இன்றைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தினத்தில் நினைவூட்டுகின்றோம்.

மறைவுக்கு சில நாட்களுக்கு முன்னரே சோவியத் அதிபர் எவ்வகையிலும், ஆயுதப் பரிகரணம் மட்டுமல்ல, அணுஆயுத ஒழிப்பே தம்முடைய முதற்கடமை என்பதை வற்புறுத்தியவர்.

இதன் அவசியத்தை நன்றாக உணர்ந்த அமெரிக்க ஜனாதிபதி மட்டுமல்ல ஐரோப்பிய நாடுகள், குறிப்பாக, ஜெர்மனியும் இங்கிலாந்தும் தங்கள் நாடுகளைக் காப்பாற்ற இரண்டாம் உலக யுத்தத்தில் சோவியத் யூனியனின் அரும்பெரும் சாதனையை மறத்தல் முடியாத காரியம்.

இப்பெரியாரின் இறுதி அஞ்சலிக்குகிறெம்லின் விரையும் உலகத் தலைவர்கள் சோவியத் ரஷ்யாவின் பங்காளிப்பு உலக சமாதானத்துக்கு இன்றியமையாதென உணர்ந்தவர்கள்.

'பி.எஸ்.'

"மகனே குமார்! எங்கேயெடா போகிறாய்? துவண்டிய மான குரல் கேட்கிறது.

"அம்மா நான் இன்னமும் சின்னவன் தானா? 55 வயது வந்துவிட்டதம்மா"

"என்ன மகனே, என்மடியில் நீ தவழ்ந்து விளையாடியது நேற்றுப்போல் இருக்கிறது. விளையாட்டரங்கில் நீ ஈட்டிய வெற்றிகள், பெற்ற விருதுகள்- நினைக்க இனிக்கும் நினைவுகள். ஆசிரியனாக எனது பள்ளிக்கூடம் 'அம்மா' வேறு பள்ளிக்கூடங்கள் விரும்பியும் போகமறுத்த உன் கல்லூரிப்பற்று! பத்தி வட்டாரக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டபோது போய்வா மகனே என்று வாழ்த்தியபோதும், தயங்கி நின்ற நின் பாசம்; அனுபவம் பெற்று வாடா, போடா' என்ற பின்னர் சென்று, வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் ஓடிவந்து என் மடிமீது துள்ளி மகிழ்ந்த காட்சி! முடிவில், என்னைப் பராமரிக்க 1975 புரட்டாதி மாதம் நடந்தோடி வந்த அழகு.....எல்லாம் முந்தா நாள் போல் இருக்கிறது. நீ பென்சன் எடுக்கிறாயடா?"

இப்படிக் கல்லூரித் தாய் அங்கலாய்த்து நிற்கிறாள்.

"அம்மா உன்னை மறக்கவோ விலகிச் செல்லவோ என்னால் முடியுமா? நான் உன் அருகிலேயே என்றும் போல் இருப்பேன்"- ஆறுதல் கூறுகின்றான் அன்பு மகன்.

செயல்திறனுக்குச் சவால் விடப்பட்டகாலம் என்றால் மிகையாகாது. புதிய கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் பாரிய பொறுப்பையும் எந்த உத்தியோகத்தர்க்கு தலையையும் சுற்றச்செய்யும் மாணவர் பாடசாலை நுழைவு, ஆசிரிய மாற்றம் இரண்டையும் யார் மனமும் புண்படாது சிரித்துச் சிரித்து இன்முகம் காட்டிச் செய்து முடித்துப் பாராட்டைப் பெற்றார். இத்தனைக்கும் சிகரம் வைத்தாற் போன்று வாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் திறக்கப்பட்டபோது வாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். பரமேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் தாக்குண்ட வலையில் அமையாது வளாகம் திறக்கப்பட்டபோது பிரதம மந்திரியை வரவேற்கும் ஒழுங்குகளின் பொறுப்பாளனாக நின்று மெச்சத்தக்க சேவை புரிந்து வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் கா. சிவராமலிங்கம்

இப்படி ஒரு காட்சியைத் தான் இன்று யாழ்|இந்துக் கல்லூரிச் சமுதாயம் காண்கிறது.

அமரர் குமாரசாமியின் ஆசி பெற்றவர்

பெற்றவள் மடியிலிருந்து தாவிக் குதித்தது கல்லூரி அன்னை மடியில் கல்வி பயின்று 1946 ல் இலங்கைப் பல்கலைக்கழகம் சென்று பட்டம்பெற்ற தோடமையாது, பாடசாலையில் பெற்ற விருதுகளை, அன்கும் - உதைபந்தாட்டத்தில் பல்கலைக்கழக வீர விருதையும் மெய்வல்லுநர் போட்டியிலும் உதைபந்தாட்டத்திலும் பல்கலைக்கழக விடுதி விருதையும் பெற்றுவந்து, 1950 மேமாதம் ஆசிரியனாகி வரலாற்றுத்துறைத்தலைவராய், மெய்வல்லுநர் பயிற்றுனராய், மாணவர் முதல்வர் சபை நெறியாளனாய், கல்லூரி விடுதிச் சாலையின் வாழ்வில் முழுமையும் பங்கு கொண்டு, விடுதி மாணவர் ஒன்றியத்தின் புரவலனாய், மாணவர்களின் நன்பனாய்ச் சேவை செய்து, ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் பாராட்டையும் அன்றைய அதிபர் திரு. ஏ. குமாரசுவாமி M. A (Lond Cal) Dip-In-Ed (Lond) Bar-At Law அவர்களின் உளமார்ந்த ஆசியைப் பெற்றவர்.

1965 ஆனி தொடக்கம் 1970 வைகாசி வரை வட்டாரக் கல்வி அதிகாரியாக பூநகரிப் பகுதியிலும் இரணைதீவிலும் பணிபுரிந்தார் ஓய்வு அறியாது உழைக்கும் இவர் வட்டாரப் போட்டிகள், பொதுப் பரீட்சைகள், ஆசிரியர்களுக்கான இடைக்காலப் பயிற்சி வகுப்புகள் போன்ற பல பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

1973 ஆடியில் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வுபெற்றார்.

பாராட்டுப் பெற்றார்

1973- ஆடி தொடக்கம் 1975 ஆவணி வரை இவரது களாகிய திருவாளர்கள் மாணிக்கவாசகர், விக்ரமரத்நா ஆகிய இருவர் சபாஷையும் பெற்றவர் இவர்.

இவர் வாழ்வின் பொன்னெழுத்துக்களாகப் பொறிக்கப்படவேண்டிய காலம் 1975 புரட்டாதி முதலாம் திகதிதொடக்கம் ஆரம்பமானதெனலாம். தன்னை வளர்த்து ஆளாக்கிய அன்னையின் தொண்டை அவாவிநின்ற இவர் யாழ்.இந்துக்கல்லூரியின் அதிபராகப் பதவி ஏற்றார், தொடங்கியது பணி,

பாரம்பரிய கட்டுக்கோப்பைக் காத்தார்

வந்த வாரத்திலேயே O/L A/L பரீட்சைப் பேறுகளில் யாழ். மாவட்டத்தில் முதலிடம் யாழ். மாவட்டத்திலிருந்து பல்கலைக் கழகங்களுக்குப் பட்டதாரி மாணவர்களை அனுப்புவதில் முதலிடம் மெய்வல்லுநர் போட்டிகளில் யாழ்ப்பாணத்தில் வீரமுதல்வர்கள் இப்படி எத்தனையோ மாடிக் கட்டிடம் அருள்மிகு ஞானவைரவர் ஆலயத் திருப்பணி என்று இப்படிப் பலப்பல ஆளுமை ஒரு சிலரின் பிறப்புரிமை. அதிர்ஷ்ட வசமாக யாழ். இந்து பெற்ற அதிபர்கள் எல்லாருமே ஆளுமைக்கு உதாரணமாகவே விளங்கினர். எனினும் நிதி, அரசியல் சமூக நெருக்கடிகள் பல மலிந்து வாழ்க்கையை எதிர்நீச்சையும் நலிவித்த ஒரு கால கட்டத்தில் அதிபராக இருந்து பல துறைப்பட்ட பிரச்சினைகளையும் தனக்கே உரிய சாதுவீக வழியில் தீர்த்துப் பல இக்கட்டான நிலைகளைத் தவிர்த்து கல்லூரியின் பாரம்பரியத்தையும் கட்டுக்கோப்பையும் காத்தவர் இவர்.

மாணபுமிகு ஜனாதிபதியின் பெருமனத்தாலும் கொழும்பு பழைய மாணவர்களின் உழைப்பாலும் உதவப்பட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

மக்கள் கருத்து

விடுபட்ட பெயர்கள்

'ஈழநாடு' 25 - வது ஆண்டு சிறப்புமலர் பார்த்தேன் வர்ணத்தில் மலர்ந்திருந்தது.

'ஈழநாடு' வளர்ச்சியில் ஒரு புதிய அத்தியாயத்தை இது தோற்றுவித்துள்ளதென்றே கூறலாம்.

பத்திரிகை என்பதே ஒருவித அவசரக்கோலம் தான். இதனால் சில சமயங்களில் பூரணத்துவத்தை எட்டிப்பிடிக்காமல் நின்றுவிட வாய்ப்பிருக்கிறது என்பதும் ஏற்றுக்கொள்ளலாம்.

'ஈழநாடு' ஆசிரியர் குழுவில் ஆரம்பகாலத்தில் திரு இராஜா அரியரத்தினத்துடன் உதவி ஆசிரியராக கடமையாற்றிய திரு மயில்வாகனம் மனோகரனது பெயர் இந்த மலரில் விடுபட்டிருந்தது அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

நல்லதரமான ஆங்கில அறிவுள்ளவர் அவர். எப்போதுமே அவரது கையில் ஒரு ஆங்கிலப் புத்தகம் இருந்து கொண்டேயிருக்கும். அதிலுள்ள ஒவ்வொரு வரியையும் அவர் படித்திருப்பார். அந்தப்புத்தகத்தில் உள்ள பக்கங்களில் எத்தனையோ கிறுக்கல் விழுந்திருக்கும் திரு. மனோகரன் தற்பொழுது யாழ். இந்துக்கல்லூரியில் பயிற்றப்பட்ட ஆங்கில உதவி ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

இவரைப் போலவே ஆரம்ப காலத்திலிருந்து கடமையாற்றிய திரு. எம். கைலேசபா, திரு. கோவிரசிங்கம், திரு எம். ஆறுமுகசாமி, திரு. இ. சோதிலிங்கம் திரு. அ. சின்னையா போன்றோரும் மற்றும் சில பெண்மணிகளும் நினைவாப்பிரகாரமாக விடப்பட்டுள்ளனர். இவ்விதம் தவறுதலாக விடுபட்ட குறைகளை கருத்து வரும் மலர்களில் செம்மைசெய்து வாசகர்கள் மனதை திருப்திப்படுத்துவீர்களென எதிர்பார்க்கின்றோம்

வாழ்க ஈழநாடு.

— கணேஷ்

கா. சிவராமலிங்கம்

ஜூலையில் பாதிக்கப்பட்ட 800 ஆசிரியர்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் இடமாற்றம்?

(மானிப்பாய்)

ஜூலை வன்செயல்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்களில் கமார் 800 ஆசிரியர்களுக்கு யாழ் மாவட்டத்தில் இடமாற்றம் கிடைக்கும் என்று நாம் நம்புவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

அதே நேரத்தில் வன்செயல்களால் பாதுகாக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு தகுதியான ஆசிரியர்களுக்கு இம் மாதம் 15ம் திகதி இடமாற்ற உத்தரவுகள் கிடைக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை இவ்வித வன்செயல்களை அடுத்து இடம்பெயர்ந்து வந்து வேலைக்குத் திரும்பாதிருக்கும் பெண் ஆசிரியைகள் முன்னிருந்த இடங்களுக்கு செல்லத்தேவையில்லையென்று மேற்படி சங்க முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மாணவர்களை அனுமதிக்கும்போது

நன்கொடைபெறும் கல்லூரி அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை!

ரணில் எச்சரிக்கை

(இ. சந்தசாமி)

மாணவர்களை அரசாங்க பாடசாலைகளில் அனுமதிக்கும் போது எக்காரணம்கொண்டும் அவர்களதுபெற்றோரிடமிருந்து நன்கொடைப் பணம் அறவிடக்கூடாது. இவ்வாறு அறவிடும் கல்லூரி அதிபர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கல்விஅமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பத்திரிகையாளர் மகாநாட்டில் அமைச்சரவை முடிவுகளை அறிவித்தபின்னர் நிருபர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் கூறியதாவது;

"அரசாங்கப் பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கு பாடசாலை கட்டிட வேலைகளுக்கோ, அன்றி தளபாடத் தேவைகளுக்கோ மாணவர்களிடமிருந்து பணம் நன்கொடையாகவேனும் பெற்றுக்கொள்ளுதல் சட்டப்படி பாரதூரமான குற்றமாகும்.

"இவ்வாறு மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து கட்டாயத்தின் பேரில் நன்கொடைகளைப் பெறுபவர்கள் மீது கஞ்சக் குற்றச்சாட்டின் பேரில் நடவடிக்கை எடுக்கமுடியும்

அவ்வாறு நன்கொடைப் பணம் பெறுபவர்கள் தொடர்பான புகார்கள் குறித்துஉடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

"ஒரு மாணவனோ மாணவியோ பாடசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர்களினதும் அவர்களின் பாடசாலையினதும் வளர்ச்சிக்காக நன்கொடைகளைக் கொடுக்க விரும்பின் எதுவிதத்திலும்தவறாகாது. எனினும் அந்த நன்கொடைகள் உரிய முறையில் பாடசாலை வரவு செலவுக் கணக்குகளுடன் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

"பணவீக்கத்தை நாம் கட்டுப்படுத்தியுள்ளோம்

- நிதி அமைச்சர்

(கொழும்பு)

சர்வதேச பொருளாதார நிலை எமக்கு விரோதமாக இருந்தபோதிலும் கடந்த ஆறு ஆண்டுகளாக எமது பொருளாதார வளர்ச்சி விகிதம் இருமடங்குகளாகவும், மூலதனம் மும்மடங்காகவும் அதிகரித்துள்ளது. அதேவேளையில் பணவீக்கமும் கட்டுப்படுத்தப்பட்டு வேலையின்மை திண்டாட்டமும் ஓரளவுக்கு முறியடிக்கப்பட்டது.

இவ்வாறு நிதிதிட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் கிறின்லேஸ் வங்கி மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

சர்வதேச வங்கியான கிறின்லேஸ் வங்கியின் ஆசிய-மத்திய கிழக்கு நாடுகளின் முகாமையாளர்கள் கலந்துகொண்ட இம்மகாநாடு கொழும்பு ஹோட்டலில் 'ஒப்ரோயில்' இடம்பெற்றது.

இம்மகாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட திரு. டி மெல் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"அடுத்த ஆண்டு நாம் கிறிதளவு பணவீக்கத்தை எதிர்நோக்கியுள்ளபோதிலும் எமது ஏற்றுமதிகளின் மூலம் கிடைக்கும் வருமானத்தினாலும் மற்றும் ஸ்திரமான பொருளாதார நடவடிக்கைகளினாலும் அதனைச் சமாளிக்கமுடியும் என்றே நம்புகிறேன்.

"சமூக-அரசியல் ஸ்திரமான நிலை இருக்கும்பட்சத்திலேயே நாம் பொருளாதார அபிவிருத்தி காணமுடியும் என்பதில் எமது அரசு மிகவும் நம்பிக்கையுடன் செயற்பட்டு அதற்கு வேண்டிய வழிமுறைகளையும் கையாண்டுவருகிறது.

"மிகவும் பழைமைவாய்ந்த சர்வதேச வங்கிகளில் ஒன்றான 'கிறின்லேய்ஸ்' வங்கியைப் போன்று வேறு வெளிநாட்டு வங்கிகளும் இதுபோன்ற மகாநாடுகளை நடத்தி இலங்கையில் வங்கி நடைமுறைகளை முன்னேற்ற உதவவேண்டும்.

பண்பாளன் 'தம்பி'

கொக்குவில் கந்தையாபவளம் தம்பதிகளின் புதல்வன் ஆறுமுகத்தம்பியை அறியாதவர்கள் வடபகுதியில் இல்லையெனலாம். அவரது நடத்தையால் இனிய சுபாவத்தால் அன்பினால் வள்ளல் தன்மையினால் அனைவரின் மதிப்பையும் இளமையிலே கவர்ந்தார். கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்ற காலத்தில் ஆசிரியர்கள், சக மாணவர்கள் ஆகியோரின் அன்பையும் ஆதரவையும் நிறையப் பெற்றார். இளமையிலே புலையிரத இலாகாவிலும் உப அதிபராகச் சேர்ந்ததன் இவர் திறமையினால் அத்திபட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார். இன மத குல மொழி வேறுபாடின்றி இவர் சேவையாற்றினார். அடக்கமும், அமைதியும், ஆழ்ந்த அறிவும், சுப்பிரமான தோற்றமும் ஏழைகள் பால் இரக்கமும் கொண்டு வாழ்ந்த இவரின் தயவினால் நூற்றுக்கணக்கானோர் இன்று புலையிரத இலாகாவில் பணியாற்றுகின்றார்கள்.

அவரர் ஆறுமுகத்தம்பி மறைந்தும் மறையாமல் அநேகரின் இதயங்களில் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார். பாரபட்சம் இன்றி, உயர்வு தாழ்வு இன்றி பரந்த மனப்பான்மையோடு வேண்டிய உதவிகளைச் செய்து முடிப்பதில் ஒரு தியாகி என்றே நாம் எண்ணுகிறோம். அவரது தியாக மனப்பான்மைக்கு ஏற்ப புகையிரத நிலையங்களும் சேவைக்கு உகந்த இடங்களாகவே அமைந்தன.

இவரை எல்லோரும் கருக்கமாகத் 'தம்பி' என்றே அன்பொழுக அழைப்பார்கள். ஆறுமுகத்தம்பிமுதியவர் தொட்டு குழந்தைகள் வரை 'தம்பி' என்று அழைப்பதனால் அவர் உண்மையே எல்லோருக்கும் 'தம்பி'யாகி அழியாப்புகழை நாட்டி வைத்தார்.

அவரின் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

அன்பன்

பாடசாலை வாரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை வாரம் சிறப்பாக கொண்டாடப்பட்டது சகல பாடசாலைகளிலும் பெற்றோர், மாணவர் பழைய மாணவர் அடங்கிய கிரமதான வைபவங்கள் பாடசாலை அதிபர்கள் தலைமையில் நடைபெற்றது.

பளைமகாவித்தியாலயம், பூநகரி மகாவித்தியாலயம், கிளிநொச்சி மகாவித்தியாலயம் ஆகிய பிரதான பாடசாலைகளில் பாடசாலை வாரத்தை யொட்டிய கருத்தரங்குகளும் நடைபெற்றன.

கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலைகள் அமைப்பில் உள்ள எட்டுப் பாடசாலைகளிற்குமான பாடசாலை வாரத்தை கொத்தணி அதிபர் இரா. கிள்ளத்தம்பி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதில் இவ் அமைப்பில் உள்ள சுமார் ஐயாயிரம் மாணவர்களும் முன்னூறுக்

[7-ம் பக்கம் பார்க்க]

தனியார் பஸ் சேவை: புதிய விதிமுறைகள்

(இ. சந்தசாமி)

தனியார் பஸ்களில் அளவுக்கதிகமான பிரயாணிகளை ஏற்றிச் செல்வதைக்கட்டுப்படுத்துவதற்கு சில விதிமுறைகளைக் கடைபிடிக்குமாறுபொலிசார் பணிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விதிமுறைகளின்படி 25 ஆசனங்களையும் அதற்கு மேற்பட்ட ஆசனங்களையும்கொண்ட தனியார் பஸ்களில் ஆசனங்களில் இருப்பவர்களை விட 20 வீதமானோரை மேலதிகமாக ஏற்றிச்செல்லலாம்.

25 ஆசனங்களுக்குக் குறைவான ஆசனங்களைக் கொண்ட தனியார் பஸ்கள் எக்காரணம் கொண்டும் மேலதிகமாக ஆட்களை ஏற்றிச் செல்ல முடியாது.

எனினும் அடுத்த மாதம் முதலாம் திகதி வரையில் தனியார் பஸ் போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்ட பின்னர் பஸ்களின் அனுமதிப் பத்திரங்களிற்குறிப்பிடும் அளவு பிரயாணிகளையே ஏற்றிச்செல்ல முடியும்.

தனியார் பஸ்போக்குவரத்து பஸ்களைக் கண்காணிக்கும் போது இந்த நடைமுறைகளைக் கையாளுமாறு சகல பொலிஸ் அதிபர்களுக்கும் பொலிஸ்நிலையங்களுக்கும் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பான உத்தரவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"அளவுக்கதிகமான பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் தனியார் பஸ்கள் மீது ஒரு பயணத்தின்போது ஒருமுறை தான் நடவடிக்கை எடுக்கலாம். அளவுக்கதிகமாகச் செல்லும் பிரயாணிகள் கிரமம் இன்றி தமது பயணத்தைத் தொடரும்வகையில் இச் சலுகையை வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. உதாரணமாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸில் அளவுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் பட்சத்தில் ஒவ்வொரு பொலிஸ்பிரிவிலோ மாவட்டத்திலோ பொலிசார் நடவடிக்கை எடுக்கும்பட்சத்தில் அப் பிரயாணிகள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதாலேயே இச் சலுகை வழங்கப்பட இருக்கிறது. எனினும் ஓரிடத்தில் மேலதிகமாக 10 பிரயாணிகள் செல்ற போது தனியாடம் விதிக்கப்பட்ட ஒரு பஸ்ஸில் மற்றொரு இடத்தில் 12 பிரயாணிகள் மேலதிகமாக இருந்தால் மீண்டும் அந்த பஸ்மீதுநடவடிக்கை எடுக்கலாம்.

அடுத்த மாதம் 1ம் திகதிக்குப் பின் அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் சகல தனியார் பஸ்கள்மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

தனியார் பஸ் போக்குவரத்து சட்டவிதிகளில் திருத்தம் செய்யப்படும் வரை சேவையில் ஈடுபட்டிருக்கும் தனியார் பஸ்களில் பணிபுரியும் நடத்துனர்களுக்கு நடத்துனர்களுக்கான அனுமதிப் பத்திரம் (லைசென்ஸ்) தேவையில்லை".

ஜூனியரும் காலமானார்

(யாழ்ப்பாணம்)

'ஈழநாடு' பத்திரிகைக்குத் தினப்பலனும் வாரபலனும் எழுதிவந்த திருமலை க.வேலுப்பிள்ளை ஜூனியரும் காலமானார். என்ற செய்தியைக்கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

'ஈழநாடு' ஆரம்பகாலம் முதல் இராசிபலன் எழுதிவந்த பிரபல சோதிடர் திருமலை க. வேலுப்பிள்ளை கடந்த இருமாதங்களின் முன் காலமானதைத் தொடர்ந்து இவரது புதல்வர் திரு. குவேந்திரன் தந்தை விட்ட பணியை 'ஈழநாட்டிற்குத் திறம்பட வழங்கிவந்தார். கடந்த 8-ந் திகதி மாரடைப்பினால் திரு. குவேந்திரன் மரணமானார்.

31-வது நாள் நினைவஞ்சலி

அந்தியேட்டி அழைப்பு

எங்கள் அன்பு அன்னை

திருமதி சுப்பையா முத்துப்பிள்ளை

அன்னையே எமது அன்பின் தெய்வமே எம்மை ஆறுதலுறவில் ஆழ்த்தி விட்டு நீங்கள் மீளாத் துயில் கொண்டுவிட்டீர்களே!

எமது அன்னையின் 31-வது நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியைகளைத் தொடர்ந்து 14-2-84ல் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் கலந்துகொண்டு எம் அம்மாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு மிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

அன்பு மகன், மகள், மருமக்கள், குடும்பத்தினர்.

பரமேந்திரபவனம்,

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (779)

ஹோம் பினான்ஸ் லிமிட்.

உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு

கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பினான்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24810

2. நியூ ப்ரசீதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22480

3. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22537, 22370

4. நியூ லங்கா அலுமினியம் இன்டஸ்ரீஸ் விற்பனவு நிலையம்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பினான்ஸ் லிமிட்.
468, காலி வீதி,
கொழும்பு-6
தொலைபேசி: 589190—587680

2. ஸ்ரீ மனிமலர் ஸ்டோர்ஸ்
157/2, ஸ்ரீ சந்திரேசன் வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 83277

வவனியாவில் 89 சிறிய குளங்கள் உடைப்பு!

(வவனியா)

வவனியாப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 89 சிறு குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாகக் கமநலச்சேவை உதவி ஆணையாளர் திரு எஸ். கணேசன் தெரிவித்தார்.

செட்டிகுளம், நெடுங்கேணி, கோவில்குளம் பகுதிகளில் இக் குளங்கள் உடைப்பெடுத்ததாகவும் அவர் கூறினார்.

வவனியாவில் ஆயிரம் ஏக்கர் வயலில் வெட்டப்பட்ட நெல் பாதிப்படைந்துள்ளதாகவும், 90 சதவீதமான உளுந்துச் செய்கை பாதிப்படைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

6 லட்சம் ரூபா நிவாரணம் கோரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (வ)

அகதிகள் பழைய இடங்களுக்கு திரும்புகின்றனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்கள் தமது பகுதிகளிற்கு மீண்டும் திரும்பச்செல்கின்றனர்.

அரசு வழங்கும் உதவிப் பணங்களைப் பெற்றுக்கொண்டு நாளாந்தம் பெருந்தொகையானோர் அகதிமுகாங்களை விட்டு வெளியேறுகின்றனர்.

இதனால் அகதிமுகாம்களை விரைவில் மூடவிடமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது பனர் முகாம்களை விட்டு வெளியேற சம்மதம் தெரிவித்து சமூகசேவைப்பகுதியினருக்கு விண்ணப்பித்து விட்டு, உதவிப்பணத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எஹிலியகொட புதிய எம். பி.

[கொழும்பு]

எஹிலியகொட தொகுதியின் புதிய எம். பி யாக கலாநிதி விமால் பத்மசிறி விக்கிரமசிங்கா நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் நியமனம் தொடர்பாக ஐ. தே. கட்சிப் பொதுச்செயலாளர் திரு ஹர்ஸா அபயவர்த்தனா தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார். (வெ)

இன்றைய பலன்

மாசி மாதம் 1-ம் திகதி
(13—2—84)

திங்கட்கிழமை

மேடம்:- தரமான பொருள் வரவு உங்கள் தராதரத்தை உயர்த்தும். கிலருக்குக் கடன் தொல்லைகளும் நிவர்த்தியாகலாம். ஆக்கபணிமூலம் மற்றவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பூமிப்பிணக்குகள் நிவர்த்தியாகலாம். சிநேகித வழியால் சில தொல்லைகள் தோன்றிமறையும். குடும்பத்தில் சுவையான நிகழ்ச்சிக்கு இடமுண்டு.

இடபம்:- அவசரம் வேண்டாம். ஆயுதபீடைக்கு இடமுண்டு. எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம். உறவுமுறையில் பிரிவுகள் ஏற்படலாம் பணவிடயத்தில் பலவீனம் தோன்றலாம். தொழில் துறையில் அதிகவனம் செலுத்தவும்-

மிதுனம்:- கருடப்பார்வை உங்களை வட்டமிடும். பிறரின் தலையீடு உங்களுக்கு வேதனையைத்தரலாம். மோசடி ஒன்றில் உங்களை மாட்டிவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். எதற்கெடுத்தாலும் சீறிவிழுவீர்கள். பொறுமை வேண்டும்.

கடகம்:- கன்னல் மொழி பேசிக் காரியத்தைச் சாதிப்பீர்கள். கவர்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். குடும்பத்திலும் அமைதி நிலவும். வெளியூர் நண்பர்களின் வருகை மகிழ்ச்சியைத்தரும்.

சிங்கம்.- எதிலும் அவசரக் கோலம் தென்படும். துரிதகதியில் செயலாற்றமுனைந்து தோல்வியை முத்தமிடலாம். சகோதரவழியால் சஞ்சலமான செய்திகிடைக்கக்கூடும். தற்பெருமையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கன்னி;- பற்றுபாசம் உங்களைப் பரவசப்படுத்தும். உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக் கொடுப்பார்கள். கல்வித்துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும். இலக்கியவட்டத்தில் சஞ்சரிப்பவர்களிற்கு இனிமையான தினம்.

துலாம்:- எப்பக்கம் திரும்பினாலும் ஆதரவு கொடுப்பதற்கு கன்னியர்கள் முன்வருவார்கள். பொதுமக்கள் மத்தியில் நல்ல மதிப்பு ஏற்படலாம். தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்குப் பெருமபங்கு இருக்கும். புதுமையான எண்ணங்கள் மேலோங்கும்.

விருச்சிகம்;- சூழ்ச்சிவலை கிழிக்கும். மனச்சாட்சியின்படி நடந்து கொள்ளவேண்டும். சிலர் வாழ்க்கையில் வழக்கு விடயங்களில் பணம் விரயமாகும். அடக்கம் நன்று.

தனுசு;- கட்டி வெல்லம் போல் இனிக்கும். வாழ்க்கை பசுமையான நினைவுகள் நெஞ்சில் அலைமோதும். இல்லற வாழ்வில் இணைப்புகள் இறுக்கமடையும். காதல்வசப்பட்டவர்களுக்குக் கனிவான தினம்.

மகரம்:- பண முடையினால் பெரிதும் வேதனைப்படுவீர்கள். கடன்தொல்லைகளும் அதிகரிக்கும். நம்பியிருந்த இடத்திலிருந்து ஏமாற்றமான செய்தி கிடைக்கும் மனத்தளர்ச்சிக்கு இடம்கொடாது நடந்து கொள்ளவும்.

கும்பம்:- பிதாவழி மூலம் மகிழ்ச்சியான செய்தியொன்று கிடைக்கலாம். ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டுவீர்கள் பிறந்தகத்தின் நினைவு தலை தூக்கும். பெரியோர் ஆதரவு முண்டு.

மீனம்:- தொழில் துறையில் புதிய உத்வேகம் காணப்படும். எத்தநிலையையும் கட்டுப்படுத்துவதில் தனிப்புகழ் அடைவீர்கள். வரவிலும் திருப்திகரமானநிலை உருவாகும். சில பிரயாணங்களும் புதுஇடப்பிரவுத்திட்டங்களும் தீட்டப்படும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை
புத்திரன் வே. குவேந்திரன்



அங்கும்... இங்கும்... எங்கும்...

சிங்கர்

சவாரிக்குச் சிறந்ததோர் பைசிக்கிள் சிங்கர்

உங்கள் பிரயாணம் எதுவாக இருந்தாலும் உற்றவொரு நண்பன்.
நீடித்த பாவனையும் தரமும் கொண்ட சிங்கர் பைசிக்கிள்.
கரடு முரடான பாதையா கல்லும் குழியும் நிறைந்த தெருவா,
சதுப்பு நிலமா, வைரமே உருவான வீதியா உறுதியான
உதிரிப்பாகங்கள் கொண்ட சிங்கர் பைசிக்கிள் ஒய்யாரமாகவே ஓடும்.
விலை ரூபா - 1,490/- (வரிகள் தனி)
சிங்கர் இலகு தவணைக் கட்டணமுறை, வாங்குவதற்கு ஒரு சிறந்த வழி.

SINGER BICYCLES

சிங்கர் (ஸ்ரீ லங்கா) லிமிட்டெட்.

* Registered Trade Mark of the SINGER Company

இன்றுமட்டும்
வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2-30, 6-00
பைலட்பிரேம்நாத்
14-2-84 முதல்
துணை

வின்ஸர் (வாழ். தனி)
தினசரி 4 காட்சிகள்
குறிப்பிட்ட சில
தினங்களுக்கு மட்டும்
வெகுமார் - ராதா
வெச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்

ஸ்ரீதர் (வாழ். தனி)
தினசரி: 10-30, 2-30
6-00 சிவாஜி
கமலஹாசன் - ஸ்ரீபிரியா
நட்சத்திரம்

ஹரன் (வாழ். தனி)
இரண்டாவது
குதூகல வாரம்!
திருலோகசந்தரின்
சிவாஜி, ஸ்ரீப்பிரியா,
வசந்தத்தில் ஓர்நாள்
(சஸ்மன் கலர்)

7 "சூப்பர் ஹிட்"
பாடல்களுடன் மகிழ்வைக்
கவர்ந்த வண்ண
வரலாறோவியம்.
றீகல் (வாழ். தனி)
தினசரி: 10-30, 2-30, 6-15,
மாலை... பூர்ணிமா
**பயணங்கள்
முடிவதில்லை**

ராணி (வாழ். தனி)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர் —லதா
**சிரித்து
வாழ வேண்டும்**
(கலர் - புதிய பிரதி)
கடுத்த வெளியீடு
டிக் டிக் டிக்

18-2-84 வரை
மனோகரா (வாழ். தனி)
10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
நம்பியார் - நாகேஷ்
மீனவ நண்பன்
(கலர்)

ராஜா (வாழ்தனி)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00
இந்தியாவில் முதல்முறை
திரையிட்டபொழுது
தடைசெய்யப்பட்டு மீண்
டும் திரையிட்ட பொழுது
175 நாட்களுக்கு மேல் ஓடி
வசூலில் சாதனை நிலைநாட்
டிய படம்.

கமல்— ஸ்ரீதேவி— தீபா
மீண்டும் கோகிலா
(சஸ்மன் கலர்)
இளைஞர்களின்
இன்பக் காவியம்

லிடோ (வாழ்தனி)
Daily 10-30, 2-15, 4-45
7-15, 9-30
Swamp Thing
(Action film)
கடைசி 3 தினங்கள்
வெலிங்டன்
(வாழ். தனி)
தினசரி 10-30, 2-30,
6-00, 9-00
முத்துராமன் - கவிதா
தேங்காய்சீனிவாசன்
**காற்றினிலே வரும்
கீதம்**
(சஸ்மன் கலர்)

கட்டுடை குடியேற்றத் திட்டத்தில் நடமாடும் விற்பனை நிலையம்

(மானிப்பாய்)

மானிப்பாய் கோவில் பற்று ப நோ கூ. சங்கம் கட்டுடை புதிய குடியேற்றத்திட்டத்தில் நடமாடும் விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது இவ்விழா சங்கத் தலைவர் திரு க. தர்மசீலன் தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியினை வலி தெற்கு மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் பாலரத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

சங்கத்தலைவர் தனது தலைமையுரையில் இந்த நடமாடும் விற்பனை நிலையத்தை இக்குடியேற்ற திட்ட மக்களின் வேண்டுகோளிற்கமைய ஆரம்பித்து வைத்து மகிழ்ச்சியடையும் அதேசமயம் உங்களது பூரண ஒத்துழைப்புடன் மிக விரைவில் நிரந்தர விற்பனை நிலையமாக மாற்ற முடியும் என்பதை விளக்கமாக கூறினார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. பாலரத்தினம் உரையாற்றுகையில் குறுகிய நாட்களுக்குள் இந்த நடமாடும் விற்பனை நிலையத்தை ஆரம்பித்த தலைமைக்காக சங்கத் தலைவருக்கும், இயக்குனர் சபைக்கும் நன்றி தெரிவிப்பதோடு கூட்டுறவு இயக்கத்திற்கு இப்பகுதி மக்கள் பூரண ஒத்துழைப்பு நல்கி விற்பனையை பெருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பாடசாலை...

5 ம் பக்கத் தொடர்ச்சி)

கும் மேற்பட்ட ஆசிரியர்களும் பெருந்தொகையான பெற்றோர் பழைய மாணவர்களும் கலந்து கொண்டனர்

இப்பகுதிகளின் வட்டாரக் கல்வி அதிகாரிகளான திரு. தங்கராசா, திரு சண்முகநாதன் ஆகியோர் பாடசாலைகளிற்கு வருகைதந்து பாடசாலைவாரம் சிறப்பாக நடைபெற ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கினார்கள்.

12-2 84
சாந்தி (வாழ். தனி)
10-30, 2-30, 4-45, 7-00
மட்டும்
Kirk Douglas-Richard
Harris
THE HEROES OF
TELEMARK
Action – Thirill — Color

**கலர் பிலிம் சுருள்
இனாம்!**

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம்சுருள்களை எம்மிடம் PROCESSING AND PRINTING செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். PROCESSING ரூபா 30/- P. C. PRINTING ரூபா 6-50.

கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம். (508)

கம்பெனிகளின் பதிவாளரிடமிருந்து அனுமதிச்சீட்டு பெறுவதற்கான விண்ணப்பம்

1982ம் ஆண்டின் 17ஆம் இலக்கமுள்ள சட்டத்தின் 21ஆம் பகுதியின்படி கம்பெனிகளின் பதிவாளருக்கு "வன்னி அபிவிருத்தி நிறுவனம்" என்ற பெயர் இடப்பட்டதும், "வரையறுக்கப்பட்ட" என்ற சொல்லை நீக்கி வரையறுக்கப்பட்ட பொறுப்புடைமையுடன் பதிவுப்படுமாறு சங்கம் ஒன்றினை அமைப்பதற்கான அனுமதிச்சீட்டு வழங்கும்படி விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

இச் சங்கத்தின் நோக்கங்களாவன:

(1) வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி இவற்றின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவதும், பேணுவதும்.

(2) வன்னி மாவட்டத்தின் விவசாய அபிவிருத்தி, கால்நடைப்பண்ணை, மீன்பிடி கைத்தொழில்துறைகளுக்கான திட்டங்கள் அமைப்பதைத் தூண்டுதலும், பேணுதலும், மேம்படுத்தலும்.

(3) வன்னி மாவட்டத்தின் வரலாற்று சமயப் பின்னணி பற்றியனவும் ஏனைய பயனுள்ள விடயங்கள் பற்றியனவுமான நூல்கள், நாளேடுகள், சஞ்சிகைகள் இவற்றைச் சேகரித்து வகைப்படுத்தி அச்சிட்டு வெளியிட்டு விநியோகித்து வியாபாரம் செய்தல்.

இச் சங்கத்தின் ஏனைய நோக்கங்கள் சங்க அமைப்பு விதி குறிப்பேட்டிலுள்ளன. இதன் பிரதியை தலைமன்னாரிலிருக்கும் ஐஸ் கட்டித் தொழிற்சாலையிலுள்ள சங்க அலுவலகத்தில் பார்வையிடலாம்.

இத்தால் இவ் விண்ணப்பத்தை மறுக்கும் ஏனைய கம்பனிக்கோ, கூட்டுத்தாபனத்திற்கோ தனிநபருக்கோ அறியத்தருவது என்னவெனில், அத்தகைய மறுப்பு 1984ஆம் ஆண்டு பெப்ரவரி 28ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கம்பெனிகளின் பதிவாளர், 267, யூனியன் இடம், கொழும்பு - 2 என்ற முகவரிக்கு கடிதமூலம் அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

1984 ஆம் ஆண்டு பெப்ரவரி 13ம் திகதியிடப்பட்டது.

மு. ஸ்ரீசண்முகராஜா,
திட்ட இணைப்பாளர்

778

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை – கோப்பாய்
A/L CLASSES 84 AUG.
வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.

இரசாயனவியல் சேதன இரசாயனம்	Mr. ஜெகன் திங்கள், புதன் 6-15 a.m
பௌதிகவியல் பொறியியல்	Mr. கலாபரன் செவ்வாய், வியாழன் 6-15 a m
விலங்கியல் மூளையவியல்	Mr. தங்கராஜா சனி, ஞாயிறு 2-15p.m
தாவரவியல் இனப்பெருக்கம்	Mr. சர்வானந்தா வியாழன் 5-15 p m ஞாயிறு 1-15 p.m

(712)

றிக்கோ

புரியாணி பிரியர்களுக்கு
மற்றுமொரு
சுவையான செய்தி!
வாடிக்கையாளர்களின் அன்புக் கோரிக்கை மீது
**'றிக்கோ' கோழிப் புரியாணி
மதிய நேரத்தில்**
'றிக்கோ' ஹோட்டலில் வழங்கப்படும்.
ஆமாம்; இதுவரை ஆடர் கொடுத்து
பார்சலில் கோழிப்புரியாணியைப்
பெற்றுக்கொண்ட நீங்கள்
15-2-1984 முதல்
'றிக்கோ' ஹோட்டலில்
கோழிப் புரியாணியை
சுவைத்து மகிழலாம்.
றிக்கோ ஹோட்டல்
370 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22464, 23889
(777)

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க

ஊழியரின் வெளிநடப்பினால்

ஒருபகுதி சம்பளம் கிடைத்தது!

(மட்டுவில்)

சாவகச்சேரி ப. நோ. கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் சம்பளப்பிரச்சினை தொடர்பாக வெளிநடப்பு செய்ததை தொடர்ந்து நடந்த பேச்சுவார்த்தையின் பின், ஒருபகுதி சம்பளத்தை வழங்க சங்க நிர்வாகம் சம்மதித்துள்ளதாகவும் மிகுதி சம்பளத்திற்கான பேச்சுவார்த்தை இம்மாதம் 18-ம் தேதிநடைபெறும்.

சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவு சங்கஊழியர் கடந்த திங்கட்கிழமை சங்க நிர்வாகத்திற்கெதிராக இரு மணி நேரம் வெளிநடப்புச்செய்தனர். சங்க நிர்வாகத்திற்கும், ஊழியர்களுக்குமிடையில் உள்ள சம்பளப் பிரச்சினையே இதற்குக் காரணமாகும்.

ஊழியர் வெளிநடப்புச் சம்பவத்தில் சாவகச்சேரி பல நோக்குசங்கத்தில் 23 கிளை ஊழியர்களும்கலந்து கொண்டனர்.

சுமார் 8 வருடங்களுக்கு முன்பு அரசாங்கம் கூட்டுறவு ஊழியர்களுக்கு ரூபா 177 50 சதம் விசேட படியாக கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தது.

இதனை சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தை தவிர ஏனைய சங்கங்கள் நடைமுறைபடுத்தின. இதைத்தொடர்ந்து முதலில் ரூபா 77-சதம் 50 வாவது தரும்படி சங்க ஊழியர் நிர்வாகத்திடம் கேட்டனர். ஆனால் நிர்வாகம் வழங்கவில்லை.

இதைத் தொடர்ந்து அரசு அதிகாரிகள் நிவாரண நிதிக்காக சிறு தொகையைக் ஊழியரின் சம்பளத்தில் கழிக்கும்படி கோரியது. அதை நிர்வாகம் உடனடியாக அமுல் செய்தது. இதனை ஊழியர் ஆட்சேபித்து தமது ஜனவரி மாத சம்பளத்தை எடுக்காது பகிஷ்கரித்தனர். இதையும் நிர்வாகம் கவனிக்க செலுத்தவில்லை

ஒரு வாரத்தின் பின்னர், ஊழியர் கடந்த திங்களன்று சகல கிளைகளுக்கும் பொருட்கள் கொள்வனவு செய்ய சகல கிளைகளிலுமிருந்து வந்திருந்தனர்.

காலை வந்ததும் உடனே வெளிநடப்பு செய்தனர்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா ஊழியர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதில் கூட்டுறவு சங்க தலைவர் திரு. எஸ்.வி. வைத்திலிங்கம், உதவி ஆணையாளர், தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சங்க தலைவர் திரு. வைத்திலிங்கம் ஊழியர்களுக்கு 77-50 கொடுக்க சம்மதம் தெரிவித்ததைத் தொடர்ந்து ஊழியர் வேலைக்குத் திரும்பினர்.

ஊழியரின் ஏனைய கோரிக்கைகள்பற்றி இம்மாதம் 18-ம் திகதி பேச்சுவார்த்தை நடக்க விருக்கின்றது. (க)

இலங்கையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றது. எனினும் இதுவரை 'யுரேனியம்' கண்டு பிடிக்கப்படவில்லை என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பி. எஸ்:

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதியைச் சிந்தாமல் சிதறாமல் வழிப்படுத்தி குமாரசாமி மண்டபத்தில் பெரும் பகுதியை நிர்மாணித்த பெருமையும் இவருக்கே உரியது.

1981, 1982 ஆகிய இரு ஆண்டுகளிலும் வடமாநிலத்தில் சிலந்த கல்லூரியாக யாழ். இந்துக்கல்லூரியும் சிறந்த அதிபராக திரு. பி. எஸ். குமாரசுவாமியும் அமைச்சினால் தெரியப்பட்டதை மிகமகிழ்ச்சியுடன் மனங்கொண்டபோதும் இவ்வதிபரின் நியாயபூர்வமான உயர்வு ஏன் கொடுக்கப்படவில்லை என்ற உணர்வுள்ள உள்ளங்கள் கேட்கத்தான் செய்கின்றன.

மாணவர்களின் அன்புக்கும் ஆசிரியர்களின் ஆதரவான ஒத்துழைப்புக்கும் உரியவர் இவர். வயது 55! இருக்க முடியாது. ஆம், இத்தனை சுறுசுறுப்பு, ஆர்வம், செயற்திறன் உடையவருக்கா 55! பி எஸ்ஸுக்கு 12-2-84 (இன்று) 55 நிறைவு திரு. போ. ச. குமாரசுவாமி யாழ். இந்துக்கல்லூரி மண்ணில் ஊறி வளர்ந்து கல்மழை பொழியும் மேகம், கல்லூரிக்கு மேல் என்றும் நின்று தண்ணளி தரும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சமூகம் திரு. குமாரசுவாமியை இளைப்பாறி விட்ட அதிபராகக் கருத மாட்டாது. கருதவும் முடியாது தன் அதிபர்களை மறக்கும் பாரம்பரியம் இக்கல்லூரிக்குக் கிடையாது.

வாழ்க திரு. பி. எஸ். குமாரசுவாமியின் ஆயராத சேவை.

ஜனாதிபதியுடன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டர்ந்து பல நடவடிக்கைகளை மேற்கொள்ள இணைப்புக்குழு தீர்மானித்துள்ளது. அமைச்சர்கள் மட்டத்தில் தீர்க்கப்படவுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட்டபின், மற்றும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது'' என்றார்.

தலைவர் திரு இராஜசிங்கம் பேசுகையில்: ''பாதிக்கப்பட்ட ஊழியருக்கு நீண்டகால புனர்வாழ்வுத்திட்டமொன்றை செயல்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இணைப்புக்குழு எடுத்து வருகிறது'' என்றார்.

இது ஒரு பாரிய திட்டமென்றும், இதற்கு அங்கீகாரம் கிடைக்குமென்றும், சகலரதும் ஒத்துழைப்பு இத்திட்டத்திற்குத் தேவை என்றும் அவர் கூறினார்.

வவனியாவில் உழுந்து, நெல் விளைச்சல் பாதிப்பு

(வவனியா)

வவனியாப் பகுதியில்கடந்த சில தினங்களாகப்பெய்த கடும் மழையினால் உழுந்து, நெல் விளைச்சல் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

உழுந்துச் செய்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்

செட்டிகுளம் பகுதியில் பல ஏக்கர் உழுந்து விளைவு நிலங்கள் அறுவடை செய்ய முடியாமல் கைவிடப்பட்டுள்ளது. இதனால் இந்தடவை உழுந்துக்கு நல்ல கிராக்கி ஏற்படவுள்ளது.

அதே நேரத்தில் வவனியா பகுதியில் விளைந்துள்ள நெற்செய்கை அறுவடை செய்ய முடியாது இருக்கின்றது. வவனியா குளத்துக்கு கீழே பயிரிடப்பட்ட அதேக ஏக்கர் நெற்பயிர்கள் நாசமாகியுள்ளன.

திருமலையை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி

அரசியல் கலாட்சி கேட்டுப் போராட வேண்டுமா? எத்தப் பிரச்சினையையும் கலந்துரையாடல் மூலம் தீர்க்கலாம்.

''ஆயுதப் போராட்டங்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்று நினைப்பது முட்டாள்தனம் ஆயுதப்போராட்டங்கள் வெற்றிபெற்றதாகச் சரித்திரம் இல்லை. உலகப்பிரச்சினைகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படுகின்றன.

''திருகோணமலை மாவட்டத்தை வெளிநாடுகளுக்கு அடகுவைக்க மாட்டோம். நாட்டின் எந்தவொரு பகுதியையும் எந்தவொரு வெளிநாட்டிற்கும் அடகுவைக்கமாட்டோம் என்று உறுதி கூறுகின்றேன்.

''வடக்குப்பிரிந்தால் அவர்கள் எங்கிருந்து மின்சாரம் பெறுவார்கள். கிழக்குப்பிரிந்தால் தண்ணீர், மின்சாரம் எப்படிக்கிடைக்கும்'' என்றார். (வெ)

கூட்டணி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. எம். சிவசிதம்பரம் (நல்லூர்) அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்துகொள்வார்கள்.

சர்வகட்சி மாநாடு நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுறது.

பாடசாலைகளில் மக்கள் தஞ்சம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஏறிபட்ட வெள்ளப்பெருக்கால் நூற்றுக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்து பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்,

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் சுமார் 50 குடும்பங்கள் நிர்க்கதியான நிலையில் உள்ளன. இவர்கள் நாளாகம் வாய்க்கால், இரத்தினபுரம் ஆகிய பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

அகதிகளாக பாடசாலைகளில் தஞ்சமடைந்த மக்களுக்கு கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு கே. சுப்பிரமணியம் நிவாரண உதவிகளை வழங்கி வருகிறார்.

படுக்கையில் வைத்து நஞ்சு பருக்கப்பட்டாராம்!

மரணவிசாரணையில் பகிரங்க தீர்ப்பு

(மட்டுவில்)

படுக்கையில் வைத்து இனந்தெரியாத சிலரினால் நச்சுத் திராவகம் பருக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட போது மரணமானார்.

மட்டுவில் வடக்கைச்சேர்ந்த 84வயதான காரிச்சாரதி அழகரத்தினம் கந்தசாமியின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ். தர்மேந்திரன் மரண விசாரணை நடத்தினார். பொலிஸ் காஸ்டபிள் தங்கவடிவேல் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

மரணவிசாரணையில்பக்கத்து வீட்டுக்காரர்சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

'தனக்குபடுக்கையில்வைத்து பலாத்காரமாக நஞ்சுபருக்கினார்கள் என்றும் தான் குடிக்கவில்லை என்றும், திமிறிக் கொண்டு ஓடிவந்து விட்டதாகவும், தனக்கு நஞ்சுபருக்கியவரின் விரலைக் கடித்துவிட்டதாகவும் தனக்கு நஞ்சுபருக்கியவர்களை அடையாளம் தெரியவில்லை என்றும் இறந்தவர் அதிகாலையில் என்மனைவியிடம் ஓடிவந்து கூறினார். அவரை உடனடியாக சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்று அனுமதித்தோம். சிகிச்சையளிக்கும்போது அவர் மரணமானார்.''

பிரேதபரிசோதனை நடத்திய டாக்டர் எஸ். கப்பிரமணியம், இறந்தவரின் வாயிலும், கழுத்திலும் நகக்காயங்கள் இருந்ததாகவும், வாய்ப் பகுதியில் சில உத்தரசைகளை எடுத்து ரசாயன பரிசோதனைக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இறந்தவரின் மனைவி பரமேஸ்வரி கந்தசாமி, மைத்துனர் க. சபாரத்தினம் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

அவர் உடை உடல் எல்லாம் நச்சுத்திராவகத்தினால் நனைந்திருந்தது உடனே அவருக்கு குளிக்கவாத்து தேங்காய்ப்பால் நல்லெண்ணை பச்சை முட்டை கருக்கியோம் பின் ஆஸ்பத்திரிக்குஎடுத்து சென்று அங்கு சிகிச்சையளிக்கும் போது அவர் மரணமானார்'' என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

திடீர் மரண விசாரணை அதிகாரி பகிரங்கத்தீர்ப்பளித்தார். பொலிசாரை தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளும்படி உத்தரவிட்டார். (ச)

யாழ். பெரிய ஆஸ்பத்திரி

உயர்நிலையடைய உதவுமாறு கோரிக்கை

(நல்லூர்)

யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரிக்குச் சில அடிப்படை வசதிகளை அளித்து அங்கு நடைபெறும் மருத்துவத் துறைப் போதனையும் நோயாளர் பராமரிப்பும் மேலும் உயர்நிலையடைய உதவுமாறு சுகாதார அமைச்சை மருத்துவ கலாநிதிகளும் மருத்துவபீட விரிவுரையாளர்களும் கோரியுள்ளனர். அவர்கள் சமர்ப்பித்துள்ள மகஜரில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''யாழ்ப்பாணபெரியாஸ்பத்திரி வளர்ச்சி குறித்து நாம்கோரும் உதவிகள் ஆடம்பரமானவை அல்ல, மிகவும் அடிப்படையான உதவிகளையே நாம் நாடுகின்றோம். இலங்கையில் உள்ள மருத்துவ போதனா ஆஸ்பத்திரிகளில் மிகவும் மோசமான நிலையில் இருப்பது யாழ்ப்பாண போதனா ஆஸ்பத்திரிதான். ஒரு மத்திய மருத்துவவை நிலையமாக ஆரம்பித்து திட்டமிடப்படாத முறையில் உருவான கட்டடங்களுடன், பழைய கருவிகளுடன் காணப்படும் ஒரு நூற்றாண்டு தொன்மை வாய்ந்த மருத்துவ நிலையம்தான் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி இதனை ஒரு போதும் ஒரு போதனா ஆஸ்பத்திரியாகத் தரமுயர்த்த முடியாது. இக்குறைபாடு பிரதம அரசாங்க கட்டிட நிபுணரின் அறிக்கைகளும் வலியுறுத்துகின்றன. அரசாங்க அதிபர் முன்னிலையில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையும் ஏற்றுக்கொண்டு, மருத்துவ பீடத்துக்கு அருகாமையில் திருநெல்வேலியில் ஒரு புதிய போதனா ஆஸ்பத்திரி அமைக்கப்பட வேண்டும் என்று கூறியது. வெளிநாட்டு உதவியுடன் இது சாத்தியமாகும்.

''யாழ்ப்பாணம்பெரியாஸ்பத்திரியில் மருத்துவ சிகிச்சை நிபுணர்கள் பதவிகள் பல உருவாக்கப்படவேண்டும். இதற்கு உரிய நிதி ஒதுக்கீடுகளும், தகுதியான மருத்துவ நிபுணர்களும் தேவை. இலங்கையில் பல ஆஸ்பத்திரிகளில் பொதுவாகக்காணப்படும்ஒரு பிரச்சினை இது ஆனால் நாட்டில் உள்ள ஏனைய போதனா ஆஸ்பத்திரிகள் போன்று யாழ்ப்பாண போதனா ஆஸ்பத்திரிக்கு இவ்விடயத்தில் முதலிடம் வழங்கப்படவேண்டும். அத்துடன் சுகாதார அமைச்சின் நிர்வாகம் பரவலாக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எமது முயற்சி தொடர்பாக அரசுடனும், பொதுமக்களுடனும், மருத்துவக்குழுவுடனும் முக்கோணத் தொடர்பினையும், ஒருங்கிணைப்பினையும் உருவாக்குவோம் என்றும் இம்மகஜரில் கூறப்பட்டு உள்ளது.

மரண அறிவித்தல்

திருமதி செல்லத்துரை இரத்தினம்மா

காலஞ்சென்ற இளைவல்லார் குப்பிளான் செல்லத்துரையின் அன்பு மனைவி இரத்தினம்மா காலமாகிவிட்டார். இவர் செல்வரெத்தினம், சௌரி மனோகரி கமலநாதன், அபிராமி தேனுகா, சரஸ்வதி மனோகரி, கோமதி தேவி ஆகியோரின் தாயாரும், சபாரெத்தினம் சயிலேந்தனின் மாமியாரும், நாகராஜனின் பேத்தியாருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று நண்பகல் 12 மணிக்கு கொக்குவில் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் உற்றார் உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 782

இப்பத்திரிகை "எழுநாடு" லிமிடெட் குதரமத்தாரால் யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு வீதி, 55-இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13-திகதி அச்சிடு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number R 199236/81. Eelanadu P. O. Box: 49, Telephone: 22389 — 24126.